[15th March 1963

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : என்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கும் மாணவர்களில் ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : That is a separate question.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது பெண்களுக்கு என்ஜினீயரிங் காலேஜில் படிப்பதற்கு வேண்டிய உடல் வலிவு இல்லை என்று சொன்னார்கள். (**கனம் சபாநாயகர் :** அப்படிச் சொல்லவில்லை). பெண்கள் விமானம் ஓட்டுகிறார்கள், ராணுவ சேவையும் செய்கிறார்கள். என் அவர்களுக்கு இதில் மட்டும் உறுதி இருக்காது ?

கனம் சபாநாயகர் : இதைப்பற்றி அவர்களையல்லவா கேட்கவேண்டும்?

Water-supply Scheme (North Madras)

* 243 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated cost of North Madras Trunk main water-supply scheme;

(*b*) the total expenditure on the purchase of cast iron pipes including delivery and handling charges;

(*c*) the cost of jointing materials;

(*d*) labour charges; and

(*e*) supervision and establishment charges?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Rs. 62.62 lakhs)
(*b*) Rs. 26 lakhs) Approximate.
(*c*) Rs. 1.00 lakh)
(*d*) Rs. 4.35 lakhs

(*e*) There is no separate staff engaged for this work alone. The staff engaged are in charge of all Capital Water-Supply Works. Ten per cent supervision charges on the work outlay will be charged to each of the schemes.

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து இந்த வார்ப்பு இரும்புக் குழாய்கள் வாங்குவதற்கு ரூ. 26 லட்சம் செலவு என்றால், ஏறக்குறைய இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவில் பாதியாகிவிடுகிறது. குடி தண்ணீர் வசதி செய்வதற்காக இந்த வார்ப்புக் குழாயை இவ்வளவு நாளும் எங்கிருந்து வாங்குகிறார்கள் ? நம்முடைய மாநிலத்தில் இதைச் செய்தால், பணம் மீதமாகும். நம்முடைய மாநிலத்திலேயே இப்படிப்பட்ட இரும்புக் குழாய்கள் வார்ப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றனவா ? இல்லையானால், அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

கனம் சபாநாயகர் : எத்தனை கேள்விகள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்விகள் போடவேண்டும்.

கலப்புத் திருமணங்கள்

244 திரு. முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் **1960–61 ஆண்டு 1962-ம் ஆண்டுகளில் பதிவு** செய்யப்பெற்ற திருமணங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றில் கலப்புத் திருமணங்கள் எவ்வளவு ?